1338

1338

கொங்கு மலர்

கோவைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

மலர் 5. | பஞ ஆண்டு. வைகாசித்திங்கள். | இதழ் 2.

LIBRARY
MADRAS

உள்ளுறை.

		பக்கம்.
	மருதமலை ஆலயம் (படம்)	
1.	கடவுள் வணக்கம் (செய்யுள்)	1
2.	கொங்கு நாடு	1
3.	சிறுவாணி விஜயம்	2
4.	வழி நடை	3
5.	கொங்கு நாடு ஒரு தனி நாடு	5
6.	இளையான் கணிசாயர்	12
7.	ஒன்பது	17
8.	புகைப்படம்	19
9.	திருநாவுக்கரசு நாயனார் செய்த திருமடம்	21
10.	பெரியபுராண வெளியீடு	24
11.	மருதமலையைப்பற்றிய கல்வெட்டுகள்	26
12.	தமிழ்மறந்த கலைகள்	29
13.	காட்டு வேப்பு	31
14.	திங்கட் செய்திகள்	

ஆண்டுச்சந்தா ரூ. 1-8-0. தனிப்பிரதி அணா 0-2-0.

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்.

1. இராவ் சாகிப் C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் B. A., B. L., ஆசிரியர்.
2. திருவாளர் S. நடராஜன் அவர்கள் B. A. உதவி ஆசிரியர்.
3. இராவ்பகதூர் T. A. இராமலிங்கஞ் செட்டியார் அவர்கள் B. A., B. L., M. L. C.
4. திருவாளர் C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் B. A.
5. ,, R. சதாசிவம் பிள்ளை ,, B. A.
6. ,, T. V. சீனிவாசராகவாச்சாரியார் ,, B. A. Retired Supd. of Police.
7. ,, C. S. சொக்கலிங்கம் பிள்ளை ,, பண்டிதர்.
8. ,, D. N. ஆறுமுகம் பிள்ளை ,, பண்டிதர்.
9. ,, தழசைக்கிழார் சிதம்பரனார் ,,

விளம்பர விகிதம்.

ஒருபக்கத்திற்கு	ஒருமாதத்திற்கு	ரூ. 10—0—0
அரைபக்கத்திற்கு	,,	ரு. 6—0—0
கால்பக்கத்திற்கு	,,	ரூ. 3—0—0
அட்டை 3-வது பக்கத்திற்கு	,,	ரூ. 15—0—0
அட்டை 4-வது பக்கத்திற்கு	,,	ரூ. 20—0—0


நீண்டகால விளம்பரஞ் செய்வோர் நேரில் எழுதிக் கேட்டுக் கொள்ளவும்.

ஆசிரியர்,


கொங்குமலர்.

கோவைத் தமிழ்ச்சங்கம்,

வைசியர் வீதி, கோயமுத்தூர்.



மருதமலை ஆலயம், கோபுரமும் மதிலும்
பின்புறமிருந்து பார்வை.



அரசமரமேடை, நாகர், ஆலய முன்புறத்து கருட
கம்பம், மலைச்சரிவு அரச மரத்திற்கு
தென்மேற்கிலிருந்து பார்வை.

செய்யுட் பகுதி.

கடவுள் வணக்கம்.

(பழம் பாடல்.)

வெந்தவெண் நீறணிந்து விரிதூல் திகழ் மார்பின்நல்ல
பந்தணவும் விரலாள் ஒருபாகம் அமர்ந்தருளி
கொந்தணவும் பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
அந்தணனைத் தொழுவார் அவலம் அறுப்பாரே.

அலைமலி தண்புனலோ டரவஞ் சடைக்கணிந் தாகம்
மலைமகள் கூறுடையான் மலையார் இளவாழைக்
குலைமலி தண்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
தலைமக னைத்தொழுவார் தடுமாற் றறுப்பாரே.

— திருச்செங்கோட்டுப் பதிகம்.
திருஞானசம்பந்தர் தேவாரம்.

கொங்கு நாடு

(பழம் பாடல்.)

கயலு லாவு வெண் டிரையெனப் படுவதங் காத்தா
லயலெ லாந்தர ளங்கொழித் ததிர்கட லாடைப்
புயல ளாவுபொன் மலைக்குவி முலைப்புவி மகட்கு
நயன மாமணி போல்வது கொங்கு நன்னாடு. 1

பலவ கைப்படு தானமுந் தருமமும் பண்புங்
குலவொ ழுக்கமு ஞானமுங் கருணையுங் குழைவு
மிலகு பத்தியு நீதியும் பொறுமையு மென்னும்
நலப யிர்த்தொகை விளைவது கொங்கு நன்னாடு. 2

நிதியெ லாந்தனித் தனிதரு வதுசிவ நியம
மதியெ லாமுபர் விப்பது மருள்வினை மாற்றிக்
கதியெ லாமுணர்த் திடுவது திரைநெடுங் கரத்தா
னதியெ லாமணி கொழிப்பது கொங்கு நன்னாடு. 3

பூம கட்குமற் புதநெடுந் திறலணி புனிதக்
கோம கட்குநெட் டிதழ்விரி பங்கயக் கோவின்
மாம கட்குமின் னமுதுறழ் கவிவலர் வழுத்து
நாம கட்குமோ ருறையுளாங் கொங்கு நன்னாடு. 4

சில மும்பல செல்வமுஞ் செறிவது திகழ்முக்
கால முந்தெரி தவத்தர்வீற் றிருப்பது கமல
சால முங்குமு தமுங்கமழ் தடத்ததந் தரமு
ஞால மும்புகழ்ந் திடுவது கொங்கு நன்னாடு. 5

மாத மும்மழை பொழிவது வருடமுப் போகம்
போத வண்மையிற் பலிப்பது குடிதழீஇப் புகழ்கூர்
நீத மன்னவர் நிறைவது பிறையணி நிமல
நாத னின்னரு டழைப்பது கொங்கு நன்னாடு. 6

— துடிசைப் புராணம்.

கோவை வழக்கறிஞர்.

சிறுவானி விஜயம்.

(புதுப் பாடல்.)

மலர் விரிய வெளிபடரும் மணிமெனவே தன்புகழைப்
பலரறிய உலகமெலாம் படர்ந்திலங்கும் தமிழ்மொழியும்
பிறப்பிடமாய் உறைவிடமாய்ப் பேணியதோர் புக்ககமாய்
இறப்பின்றி மூப்பின்றி இளமையுடன் இருக்குமொரு
புனிதமுடைத் தென்னுட்டிற் பொன்னிநதி மேற்றிசையில்
கனிதருசீர்ச் சோலையுடைக் கவின்கொங்கு நாடுளதே.

அந்நாட்டில் வளமைதரும் ஆற்றலுடைக் காஞ்சிநதி
பொன்னுட்டின் தருவெனவே போதுமள வுணவளிக்க
அதன்கரையில் உள்ளதுமோர் அழகியவூர்க் கோவையிலே
விதம்விதமாய் நீதியினை விளக்குகிற வழக்கறிஞர்
ஆறுறும் எண்ணமுடை அறிவாளர் அகங்களிக்கும்
பேரூரச் சிறுவானி பெயர்ந்ததுவும் கேட்பீரால்.

—இவை இரண்டும் தரவு.

வழிநெடுக வழக்கறிஞர் வாதாடிப் போமளவில்
விழியிட்டுக் கண்டனவும் விரித்துரைக்கில் வியப்பாமே.

திருப் பேரூர்க் கோபுரத்தின் திரள்உருவக் காட்சியுமே
விருப்பேறு மனதிலுநல் வியப்புறுத்தல் வியப்பலதே.

சித்திரச்சாவடிநெடுக சீர்நொய்யல் நதியோரம்
எத்திறத்தோர் அகங்களிக்கும் எழிற்பொழில்கள் தோன்றிடுமே.

ஓலின் நீர்த் துறையில் ஓட்டியெழும் சீறாரின்
சீராரும் குடிமக்கள் செழித்துளதும் மேன்மையதே.

பொரத்திமலை அடிவாரம் பொலிந்திருக்கும் வனத்திடையிற்
கரத்திடையே இட்லிகளைக் களிப்புமிக உண்டனரே.

—இவை ஐந்தும் தாழிசை.

(தொடரும்.)

கோவைக் சிழார்.

(மொழிபெயர்ப்பு.)

வழிநடை.

(ஒரு ஆங்கில மாசிகையில் கண்ட "Passing Through" என்ற தலைப்புக் கொண்ட கவிகளை ஒட்டிப் பாடியவை.)

1. நாம்வாழும் நாடெனிலோ அழகியதோர் நன்னாடே,
நாம்வாழும் வாழ்க்கையுமே நல்லடியார் வாழ்க்கையதே,
நாம்எதும் யாத்திரையோ நமக்கெட்டா அளவினதே,
நாம்எதும் இடந்தானும் நாமெண்ணு நிலைமையதே.

2. எங்கேதான் இருந்தாலும், எங்கேதான் சென்றாலும்,
சங்கேதம் சிறிதின்றிச் சிரித்திட்டுச் செல்லுவமே,
அங்கேதான் சிரிப்பெல்லாம் அல்லனவாய் மாறிடுமோர்
பங்கேதும் பிரிக்கவொணாப் பான்மையதாய் நேரிடுமே.

3. வழிதனிலே செழும்பொழிலில் வண்டுகளோ இசையுடனே
விழிதனிலே நறும்பூக்கள் விண்ணிறங்கள் கொண்டிலங்கிப்
பொழிவதனைக் கண்டவுடன் புகுந்தங்கே தேனினையும்
நழுவியெடுத் துண்பதுமோர் நற்றோற்றம் எதிர்ந்திடுமால்.

4. பலவிடத்தே ஆறுகளும் பசும்வயல்கள் இடையோடும்,
சிலவிடத்தே ஏரிகளும் சீர்ப்பொழில்கள் அருகிருக்கும்
நிலவிடத்தே குன்றுகளில் நீருருவி விழுந்தோடும்,
பிலவிடத்தே ஊற்றுகளில் பேருதகம் சிலிர்த்தேகும்.

5. ஏறுத மலையொன்றங் கெதிர்ப்படுமே ஒருகாலம்,
ஆறுத வழியொன்றிங் அயர்த்திடுமே ஒருகாலம்,
கூறுத படுதுயரங் கொண்டழுத்தும் ஒருகாலம்,
சீறுத பெருங்கோபஞ் சினைத்தெழும்பும் ஒருகாலம்.

6. தள்ளாத தோர்துயரம் தடைப்படுத்தும் காலைபிலே
வள்ளாத **ஓரன்பு** விலகிடவே வந்தெய்தும்,
கொள்ளாத **எதிர்நோக்குக்** கூடவரக் கூப்பிடுமே,
அள்ளாத விருந்தேதமபோல் அணைந்திடுமே நன்மைசெய.

7. நெஞ்சினிடைத் துக்கமும்தான் நெடுங்காலம் தாங்காதே
அஞ்சலென **நம்பிக்கை** அகங்குளிர முன்வருமே,
தஞ்சமென முன்வீழ்ந்துத் தாமரைமெல் லடிகளையே
குஞ்சமெனத் தலையணியக் கூடிடுவான் **பெருந்தகையே.**

கோவைக் கிழார்.

6-வது பாடல் — அன்பு — Love.
எதிர் நோக்கு — Hope.

7-வது பாடல் — நம்பிக்கை — Faith.
பெருந்தகை — கடவுள் — God.

சரித்திரப் பகுதி.

கொங்குநாடு ஒரு தனிநாடு.

பண்டைக்காலம் முதற் கொண்டு கொங்கு நாடு ஒரு தனி நாடாகக் கருதப் பெற்று வந்திருக்கிறது. அவ்விதக் கூற்றுக்குப் பண்டைக் காலம் முதல் பழைய சங்கச் செய்யுள்கள் ஆகியான பல ஆதாரங்கள் இருக்கின்றன. கடைச் சங்கத்துப் புலவர்கள் கொங்கு நாட்டை ஒரு தனி நாடாக எடுத்தாண்டு இருக்கின்றார்கள். புறநானூற்றில், "கோங்கு புறம் பெற்ற கொற்ற வேந்தே" (373) என்ற அடியினால் கொங்கு நாடு ஒரு தனி நாடாகக் கருதப்பெற்று வந்ததை அறியலாம். அந்நாட்டு மக்களைக் கோங்கர் என்ற பெயரால் அழைத்தனர் என்பதை "கொங்கர் குடகட லோட்டிய ஞான்றை" (160) என்ற அடியினால் அறியலாம்.

சிலப்பதிகாரக் கதை நடந்த நாளில் பாண்டி மண்டலம், சோழ மண்டலம், சேர மண்டலம் என்ற மூன்று மண்டலங்களோடு கொங்கு மண்டலம் என்ற ஒரு மண்டலமும் இருந்ததாக அந்நூல் கூறுகிறது. அம்மண்டலத்து அரசர் பெயர் கோங்கு இளங் கோசர் என்றும் அந்நூல் கூறுகிறது. கண்ணகி வானுலகுக்குச் சென்ற பிறகு அவளைப் பத்தினிக் கடவுளாகக் கொண்டு ஆலயம் அமைத்துப் பதுமை வைத்து வணங்கிவந்ததன்றி அவளுக்காக ஒரு விழாவும் ஏற்படுத்தி அரசர்களெல்லாரும் கொண்டாடினர்கள். அவ்வாறு பாண்டியர், சோழர், சேரர் இவர்களோடு கொங்கு மண்டலத்துக் கொங்கு இளங்கோசரும் திருவிழாக்கொண்டாடின காக அறிகிறோம். ஆகவே சிலப்பதிகாரக் காலத்துக் கொங்கு நாடு தனி நாடாக இருந்தது எனலாம். கோசர் என்ற பெயர் புற நானூற்றில் 169, 396 பாடல்களில் காணப்படுகின்றது. மேலும் பழைய சங்கத்து நூலாகிய பதிற்றுப் பத்திலும் கொங்கு நாடு

கூறப் பெற்றுள்ளது. அக்காலத்தில் இந்நாடு ஒரு தனி நாடாக இருந்திராவிட்டால் அதனைத் தனியாக குறிப்பிட வேண்டிய அவசியம் இருந்திராது.

மேற் சொல்லிய காரணங்களைக்கொண்டு கொங்குநாடு எல்லாக் காலங்களிலும் ஒரு தனிப்பட்ட நிலைமையைக் கொண்டிருந்தது என்றுவது ஒரு சுயேச்சையான அரசியலைக்கொண்டிருந்தது என்றுவது கூற இயலாது. வெகுகாலமாகப் பண்டைப் பெருமை வாய்ந்த சோழ பாண்டிய நாடுகளும் அடிக்கடி மாறிக்கொண்டும் பரப்பு வேறு பட்டுக் கொண்டும் அரசியல் மாறுபட்டும் சுயேச்சை பல விதமாக வேறு பட்டும் இருந்து வந்ததை அறிவோம். சில சமயங்களில் அவைகள் சுயேச்சையை யிழந்து மற்ற நாடுகளோடு சேர்ந்து அரசாளப் பெற்று வந்ததையும் அறிவோம். அந்நாடுகளின் எல்லைகளும் பெயர்களும் சற்றேனும் மாறவில்லை. அவைகளைப்போலவே கொங்கு நாடும் பல மாறுதல்களை அடைந்தது. அக்கப் பக்கத்து நாட்டு அரசர்கள் அடிக்கடி கொங்கு நாட்டின்மீது படை எடுத்துப் பற்பல பாகங்களையும் சில சமயங்களில் முழுவதையும் தம்தம் நாடுகளுடன் சேர்த்து ஆண்டிருக்கிறார்கள். ஆனால் கொங்கு நாட்டின் எல்லைகள் மாறவில்லை. அமைப்பும் வடிவும் ஒரே விதமாக இருந்து வந்தன. பெயரும் போகவில்லை. நாட்டுப் பிரிவுகளும் மாறவில்லை. நாட்டுக்குடிகளின் தன்மையும் சிறிதேனும் மாறவில்லை.

சிலப்பதிகாரம் நடந்த நாள்களில் கொங்கு நாட்டை ஆண்ட அரசர்கள் கோசர் என்ற பெயரை வகித்திருந்தார்கள் என்று முன்னமே சொன்னேம். பிறகு இந்நாட்டை இரட்டர் என்ற ஒரு வம்சத்தார் ஆண்டனர் என்றும் அவர்களுடைய தலை நகரம் ஸ்காந்தபுரம் என்றும் "கொங்கு தேச ராஜாக்கள்" என்ற நூலினால் அறிகிறோம். ஸ்காந்தபுரம் என்ற ஊர் எது என்று அறியக்கூடவில்லை. சிலர் அப்பெயர் கரூரின் பண்டைப் பெயர் என்பார்கள்.

பிறகு, இந்நாட்டைக் கங்க வம்சத்தினர் கைப்பற்றிக்கொண்டு தங்கள் நாடாகிய கங்கவாடி என்று வழங்கும் கங்கைப்பாடியோடு சேர்த்துக்கொண்டு ஆண்டார்கள். அக்கங்க அரசர்கள் காவேரி

நதியின் வடகரையில் கொள்ளேகாலத்திற்கு அடுத்தாற் போலுள்ள தலைக்காடு என்ற நகரத்தைத் தலைநகராகக்கொண்டு ஆண்டார்கள். இவ்வம்சம் பலநூறுண்டு ஆண்டுவந்தது. இம்வம்சத்தைப்பற்றி விவரமாகக் கூறுகிற **கொங்குதேச ராஜாக்கள்** என்ற நூல் இவர்களைக் கொங்கு அரசர்கள் என்று பெயரிட்டுக் கூறுகின்றது. இவ்வம்சத்தார் சோழர்களால் தாக்கப்படும் வரையில் அரசாண்டார்கள். ஆகவே கங்க மன்னர்கள் அரசாண்ட காலம் முழுவதும் கங்கவாடி என்ற கன்னடிய இராச்சியத்தோடு கொங்குநாடு ஒன்றுக இணைக்கப்பெற்றிருந்தது எனலாம். ஆகவே அரசியலில் தனிப்பட்ட நிலை கொங்கு நாட்டிற்கு அந்நாளில் இல்லாமலிருந்தபோதிலும் எனைய தன்மைகளில் இந்நாடு தனித்த நிலையை இழந்திருக்கவில்லை.

சோழர்கள் கங்கர்களை வென்று கொங்குநாட்டைப் பிடித்த காலத்தில் இதனைச் சோழமண்டலத்தோடு சேர்த்துக்கொண்டார்கள். ஆனால் அரசாட்சி வகைக்காக இதனை ஒரு தனி மாகாணமாகக் கொண்டு இதற்குத் தனிப்பிரதிநிதிகளை அரசு செய்ய நியமித்திருந்தார்கள். அப்பிரதிநிதிகள் பிற்காலங்களில் சுயேச்சை அதிகாரம் பூண்டு அரசாள ஆரம்பித்தார்கள். அவ்வகை ஆண்ட அரச வம்சத்தினர்களுக்குக் கொங்குச் சோழர்கள் என்ற பெயரைத்தந்திருக்கின்றார்கள்.

சோழர்கள் பெருங்கீர்த்தி பெற்றுச் சிறப்புடன் ஆண்ட காலத்தில் சேக்கிழார் பெருமான் பெரிய புராணம் என்ற திருத்தொண்டர் புராணத்தை அருளிச் செய்தார். அப்பெருமான் சோழ மன்னனின் அமைச்சராக இருந்து வந்ததினால் சரித்திரச் செய்திகளை நடந்தது நடந்தபடி எழுதியிருக்கின்றார். அவர் கொங்கு நாட்டை தனிநாடாக எடுத்துக் காட்டியிருக்கின்றார். சமயாசாரியர்கள் மூவர்களின் சரித்திரங்களைக் கூறுங்காலங்களில் அவர்கள், நாடுநாடாக செல்லும்போது ஒருநாட்டைத்தாண்டி மற்றொரு நாட்டிற்குள் செல்கையில், இன்ன இடத்தைவிட்டு இன்ன இடத்திற்குப் போகையில், இந்நாட்டு எல்லையைத் தாண்டினார்கள் என்று, மிகவும் தெளிவாக எடுத்து உரைத்திருக்கின்றார். அவ்விதம் கொங்கு

நாட்டிற்கு ஏற்பட்டிருந்த தனிப்பட்ட எல்லைகளை அடியிற்கண்ட பாசுரங்களில் காணலாம்.

85, 86, 88, & 92 ஏயர் கோன்கலிக்காமர் புராணம்.

49, 140, 141, 164 & 172 சேரமான் பெருமாள் நாயனார் புராணம்.

3, 13, 14, & 19 வெள்ளானைச் சருக்கம்.

323, 324, 327, 345, 336, 337, 338, & 339
திருஞான சம்பந்தர் புராணம்.

இப்பாசுரங்களை நன்றாக ஊன்றிப்படிக்குமிடத்து இக்கொங்குநாடு ஒரு தனித்தநாடாக இருந்தது என்ற எண்ணத்தை அமைச்சர்களில் சிறந்த அமைச்சராகவும் கவிஞர்களில் சிறந்த கவிஞராகவும் இருந்த சேக்கிழார் பெருமான் கொண்டிருந்தார் என்று அறியக்கூடும்.

மேலும் சேக்கிழார் பெருமானுக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன் இருந்த ஸ்ரீமத். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அதே எண்ணத்தைக் கொண்டு இருந்தார்கள் என்பதற்கு அடியிற்கண்ட அவரது திருவாக்குகள் சான்றாகும்.

"கொங்கில் குறும்பில் குரக்குத்தளியாய்"— ஊர்த்தொகை-

"கொங்கே புகினும் கூரை கொண்டா றலைப்பாரில்லை"—
—அவிநாசித் தேவாரம்.

"மீ கொங்கில்அணி காஞ்சிவாய்ப்பேரூரர் பெருமானே"—
—கோயில் திருப்பதிகம்.

சோழர்களுக்குப்பின் இக்கொங்குநாடு பாண்டியர்கள், ஹாயிசளர்கள், விஜயநகரத்தார், மைசூர் மன்னர்கள் முதலிய வம்சத்தினர்களிடம் சென்றது. இக்காலங்களிலெல்லாம் வெவ்வேறு இராஜ்ஜியங்களுடன் இணைக்கப்பெற்றிருந்த போதிலும் தனது தனிப்பட்ட வாழ்க்கையை இந்நாடு இழக்கவில்லை.

இந்நாட்டின் அமைப்பு மாத்திரமேயன்றி இந்நாட்டுக் குடிகளின் பழக்க வழக்கங்களும் பண்டைக்காலம் தொட்டு ஒரே வித

மாக இருந்து வந்தது எனலாம். இக்காலத்திலும் ஜாதி விவகாரங்கள் நடைபெறும்போது கொங்கு நாட்டுப் பண்டை வகுப்பார்களுக்கு உள்ள உரிமைகள் சிறப்புடன் நிற்கும். பாண்டிய சோழிய தொண்டைமண்டலச் சாதியார்களை வேறுகப் பிரித்துக் கொங்கு மண்டலச் சாதியார்களைத் தனிப்படச் சிறப்பித்துக் காட்டுவதுண்டு. உதாரணமாகக் கொங்கு வேளாளர்கள், கொங்குப் பறையர்கள், கொங்குப் பள்ளர்கள், கொங்கு வண்ணர், கொங்கு நாவிதர் முதலான கொங்கு நாட்டு உரிமை மக்கள் ஜாதி வழக்கங்களில் தங்களை முதன்மைப்படுத்திப் பேசிக்கொள்வார்கள். சமூக வழக்கங்களிலும் இவர்களுடைய வழக்கங்கள் எனைய நாட்டார்களிடமிருந்து சிறிது வேறுபட்டே யிருக்கும். இவ்விதக் காரணங்களினால் கொங்கு நாட்டைத் தனித்த நாடு என்று நிச்சயிக்கக்கூடும்.

மேலே காட்டிய கூற்றுக்கு எதிரிடையான அபிப்பிராயம் ஒன்று உண்டு. வித்வான் திரு. இராகவய்யங்கார் அவர்கள் அவ்விதக அபிப்பிராயத்தை வலியுறுத்தித் தாமியற்றிய "சேரன் செங்குட்டுவன்," "சேரர் பேரூர்" என்ற நூல்களில் வெளியிட்டிருக்கின்றார். பல மேற் கோள்களை எடுத்துக் காட்டிக் கொங்குநாடு சேரமண்டலத்தின் ஒரு பகுதி என்றும் சேரருடைய ராஜதானி கொங்கு நாட்டின் கீழண்டையிருக்கும் கரூர் என்றும் எடுத்து எழுதியிருக்கின்றார் அவ்வபிப்பிராயத்தை எடுத்தாளுவதற்காக அவர் கொண்ட சான்றுகள் எவைகளென்றால் தமிழ் மொழியில் வழங்கிவரும் மூவேந்தர், மூன்நாடு முதலான பதங்களில் கொங்குநாட்டின் பெயர் விலக்கியிருப்பது ஒன்று. இரண்டாவது ஸ்ரீமத். அருணகிரிநாத சுவாமிகள் அருளின திருப்புகழில் கண்டவை. மூன்றுவது கொங்குநாட்டில் உள்ள தலங்களைப்பற்றிய புராணங்கள் கூறும் கூற்றுக்கள் ஆகும். இச்சான்றுகளைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

எதிர் மறையைக்கொண்டு உடன்பாட்டை முழுவதுமாக நிரூபிப்பது கடினம். பதப்பிரயோகங்களில் சிலபெயர்கள் விலகியிருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆகவே விலகின ஒருகாரணம் பற்றி மாத்திரம் விலக்கியவை இருக்கவில்லை என்று நிரூபிக்க

முடியாது. மூவேந்தர் முதலிய பதப்பிரயோகங்கள் அக்காலத்தில் மிகவும் பிரக்கியாதி பெற்ற மூன்று வேந்தர்களைப்பற்றிச் சொன்னதே ஒழிய நான்காவது வேந்தன் இல்லை என்பது அதன் பொருள் அல்ல. அவ்விதமே முந்நாடும். நன்னூல் முதலிய நூல்கள் தமிழ் நாட்டில் பன்னிரண்டு பிரிவுகள் இருந்ததைச் சொல்லுகின்றன. ஆகவே இக்காரணம் சரியானதல்ல.

இனி ஐயங்காரவர்கள் எடுத்தாண்ட மேற் கோள்களில் மிகப் பழமை வாய்ந்தது அருணகிரிநாத சுவாமிகளுடைய திருப்புகழாகும். சுவாமிகள் பழநியைப்பற்றிக் குறிக்கும்போது

"சேரர் கொங்கு வைகாவூர் நடுதில்"

என்று பாராட்டியிருக்கின்றார். இதனால் கொங்குநாடு சேரர் களுடையது என்று பொருள்படும். சுவாமிகள் வாழ்ந்த காலம் 450 ஆண்டுகளுக்கு முன். ஆகவே இவ்வாக்கியம் எற்பட்டது மிகச் சமீபகாலத்தில் தான். சுவாமிகள் காலத்தில் கொங்குநாடு மைசூரார் ஆதிக்கத்தில் இருந்தது. ஆதலின் சுவாமிகள் கர்னபரம் பரையை முன்னிட்டு இவ்வபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கலாம். சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் கொங்குநாடு 9, 10 நூற்றாண்டு களில் சிறிது காலம் தான் கேரளநாட்டு மன்னர்கள் ஆதிக்கத்தில் சேர்ந்திருந்தது என அறியலாம். அதை உத்தேசித்தே இவ்வித அபிப்பிராயத்தையும் சுவாமிகள் எடுத்தாண்டிருக்கலாம்.

அருணகிரி நாதர் காலத்திற்குப் பின்னர்த்தான் மற்ற தல புராண ஆசிரியர்கள் தோன்றினர்கள். திருப்பேரூர்ப் புராண ஆசிரியர்,

"கோதைநனி யாண்டதொரு கொங்குவள நாடு"

என்று வருணித்திருக்கிறார். இதில் கோதை என்பது சேர அரசரின் பெயர். இவ்வாசிரியரான கச்சியப்ப முனிவர் வாழ்ந்தது 150 ஆண்டுகளுக்கு முந்தித்தான். இவ்வாசிரியருக்குப் பின் அவிநாசிப் புராணம், கரூர்ப் புராணம், பவானிப் புராணம், திருச்செங் கோட்டுப் புராணம், திருமுருகன்பூண்டிப் புராணம் முதலியவைகள் எற்பட்டன. இவ்வாசிரியர்கள் அருணகிரி நாதர் வெளியிட்ட

கூற்றினை மேற்கொண்டு கொங்கு நாட்டை சேரர்கள் ஆண்டார்கள் என்று கூறியிருக்கின்றார்கள். வித்வான் திரு. இராகவய்யங்கார் தம் அபிப்பிராயத்திற்குச் சான்றாகக் கரூர்ப் புராணத்தைப் பெரும் பான்மையாக எடுத்து ஆண்டிருக்கின்றார். கரூர்ப் புராண ஆசிரியர் பெயர் அந்நூலில் கூறப்படவில்லை. ஆனால் அதனாசிரியர் அவிநாசிப் புராணம், அப்பிரமேயத்தலப் புராணம் இவைகளை எழுதின இளையான் கவிராயர் என்று கூறுகின்றனர். அவ்விதமாயின் இப்புராணம் நூறு ஆண்டுகளுக்கு முன்னர்த்தான் எழுதப்பெற்றிருக்கவேண்டும். இத்தகைய சமீப காலத்து நூலில்கண்ட ஆதாரத்தைக்கொண்டு ஒரு அபிப்பிராயத்தை வற்புறுத்த முடியாது. சேரனுக்குக் கொங்கன் என்ற ஒருதம்பி இருந்ததாகவும் அத்தம்பிக்கு இந்நாட்டை அவன் பகிர்ந்து கொடுத்ததாகவும் அதனால் இந்நாட்டிற்குக் கொங்கு நாடு என்று பெயர் வந்ததாகவும் ஒரு கர்ன பரம்பரை உண்டு. இக்கதைக்குப்பண்டைய ஆதாரம் எதுவும் இல்லை. இக்கதையை அனுசரித்துப் பிற்காலப் புலவர்கள் தங்கள் நூல்களில் இதனைப் புகுத்தியிருக்கலாம்.

ஆனால் சேரநாடு என்னும் கேரளத்தில் வழங்கிவரும் பழக்க வழக்கங்களைக் கொங்கு நாட்டாரின் பழக்க வழக்கங்களோடு ஒப்பிட்டுப்பார்த்தால் எக்காலத்திலும் இவ்விரு நாடுகளும் ஒன்றாக இருந்திருக்க முடியாது என்று சொல்ல வேண்டும். கொங்குநாடு சேரநாட்டின் ஒரு பகுதியாக இருந்திருந்தால் சேரநாட்டு வழக்கங்கள் கொஞ்சமேனும் கொங்குநாட்டில் பரவி இருக்கும். சேர நாட்டுத்தலைநகர்கள் கொங்குநாட்டின் கீழ்க்கோட்டில் இருந்திருக்குமானால் சேரநாட்டுப் பழக்க வழக்கங்கள் பெரும்பான்மையாகக் கொங்குநாட்டில் இருந்திருக்க வேண்டும். இவை எல்லாம் ஆராய்ந்து பார்த்தால் ஆதிகாலம் முதல் இவ்விரு நாடுகளும் தனித்தனியே இருந்திருக்க வேண்டுமென்றும்; கொங்குநாடு ஒரு தனி நாடாக இயற்கையிலேயே அமைந்து வந்ததென்றும் திண்ணமாகக்கூறலாம்.

கோவைக் கீழார்.

கொங்கு மலியிற் எங்கும் மலியும்.

இளையான் கவிராயர்.

கொங்கு நாட்டில் அவதரித்துத் தமிழ் மொழியில் அன்பு பூண்டு சிறந்த நூல்களை எழுதிய புலவர்களில் இளையான் கவிராயர் என்பவர் மிகச்சிறந்த புலவர் ஆவர். அவரை இளையான் கவிராயர் என்றும் **இளைச்சியண்ணுவி** என்றும் **இளைச்சியண்ணுவிக் கவிஞர்** என்றும் வழங்குவார்கள். அவர் இயற்றிய நூல்கள் இரண்டு இப் போது வெளிவந்துள்ளன. அவைகள் அவிநாசிப் புராணம், அப்பிர மேயத் தல புராணம் என்பன. இவ்விரண்டு நூல்களிலும் எவ்விடத் திலும் தம் பெயரினை அப்புலவர் குறித்தவரல்லர். பெயரே குறிக்கப் பெறாதிருக்கையில் அவரது சரித்திரம் எவ்வாறு அவற்றிலிருந்து தெரியக்கூடும்? எத்துணை விசாரித்துப்பார்த்தும் ஒன்றிரண்டு கர்ண பரம்பரைச் செய்திகளைத் தவிர அவரது வாழ்க்கைச் சரித பாகங்கள் எவையும் கிடைக்கவில்லை.

அவிநாசிப் புராணம் பதிப்பித்தவர்கள் அப்புராண ஏடுகளைப் பரிசோதித்ததில் இரண்டு ஏட்டுப் பிரதிகளில் அடியிற்கண்ட வெண்பா ஒன்று அகப்பட்டதாகக் கூறுகின்றார்கள்.

"மாடலர்கோன் தன்றை வயித்தியநா தன்னிளையான்
பாடல்செய்தா னின்பப் பரைகாண — வாடல் செய்த
வற்பதா னந்தர் அவிநாசி மான்மியத்தைச்
சொற்பனுவ னுவாற் றொகுத்து."

இவ்வெண்பாவைக்கொண்டு இந்நூலாசிரியர் பெயர் வைத்திய நாதன் என்றும் அவர் தம்பி என்றும் பல பொருள் கூறி முடிவு காணமல் பதிப்பாசிரியர்கள் திகைத்தார்கள். ஆனால் முகவுரைச் சருக்கத்தில் "தமிழ் வேதாந்தப் புகலிவாழ் திருஞான சம்பந்த சைவ முனி பொற்கை யேந்தி" என்று இருத்தலால் இப்புலவர் ஆளுடைய பிள்ளையாரது ஆதீனத்தாருள் ஒருவராகிய திருஞான சம்பந்த தேசிகருடைய மாணாக்கர் என்று ஊகித்தெழுதுகின்றனர். சம்பந்த சுவாமிகளுடைய ஆதீனங்கள் "தருமையும் கமலையும் விரி தமிழ்க் கூடலும்" என்னும் தருமபுரம், திருவாரூர், மதுரை என்ற மூன்று தலங்களிலும் உள்ளன. ஆகையால் இம்மூன்று ஆதீனங் களுள் ஒன்றின் மாணாக்கராக நமது புலவர் இருந்திருக்கவேண்டும்.

மேலும் அப்பிரமேயத்தல புராணப்பதிப்பில் இக்கவிராயரது குறிப்புகள் சிறிது அதிகமாக அகப்படுகின்றன. அப்புராணப் பாயிரத்தில் 6 தனியன்கள் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றன.

மருவளர்செந் திருவனசத் தார்ச்சு சீலன் வரிசையன்னப்
பரித்துவசன் றனகு பேரன்
திருவருள்சேர் திருமாடல கோத்தி ரத்திற் செனித்ததிக
தமிழ்க்கடலிற் றேர்ந்த நெஞ்சன்
அருள்பரவு மப்பரமே சுரர்புரா ணவிஞ்சி லிங்கர்புக
ழிரண்டுஞ் செய்து
வருணமுதற் சம்பந்தர் பதத்தைப் போற்றி வளரிளையான்
புகழுலகில் வாழி தானே.

ஆறு சாத்திர மாய்ந்துணர்ந் தோதுசீர்
ஏறி ளைச்சியண் ணைவி யியன்றமிழ்ப்
பாற னைத்தினம் பண்புட னைவினிற்
கூறிற் செல்வங் குளிர்ந்து பொழியுமே.

சித்திரசே னதிபர்க்கு மகதனருட் கொங்கணர்க்குஞ் செய்பே
ரின்பம்
வைத்தவிடை ஞானியர்க்கு மாலயங்க டிருவமைத்த
வணிக னர்க்கும்
முத்தமிழுங் கற்றறிந்த **விளைச்சியண்ணைவி** யியர்க்குமின்ப
முத்தி தந்த
அத்தரெனு மப்பரமர் தாள்பரவ வாழ்வுபதி னாறுங் கூடும்.

இப்பாடல்களினால் நாம் அறிவன—: எனை என்னில் இளை யான் கவிராயர் என்பவர் திருமகள் அருளும் சுசீலமும் பெற்ற தனவந்தர் குலத்தில் மாடலர் கோத்திரத்தில் பிறந்து தமிழ் மொழியில் சிறந்து விளங்கி முதல் வருணத்தில் உதித்த சம்பந்த ருக்குச் சீடராகி அப்பிரமேயப் புராணம் அவிநாசி லிங்கர் மான் மியம் என்ற இரண்டு நூல்களையும் செய்தார்; மேலும் ஆறு சாத் திரங்களையும் இளைச்சியண்ணைவியர் கற்றுத்தேர்ந்து தமிழ்ப் பாடல் கள் பாடினார்; அப்பாடல்கள் மிகவும் இனிமையாக இருத்தலின்

கேட்பவர்கள் மனது குளிர்ந்து மிளிரும்; இளைச்சியண்ணுவியர் தமிழுக்கு வேறு எப்புலவர் தமிழும் ஒப்பாகாது; அவரது பாடல்களைப் படித்து உணர்ந்தால் நீண்ட ஆயுளும் சகல சம்பத்தும் கிடைக்கும்: முதலியன. இச் செய்திகளைத் தழுவிப் பல புலவர்கள் தாம் கொடுத்த சாற்றுக் கவிகளிலும் இளையான் கவிராயரைப்பற்றி வருணித்திருக்கின்றனர். கவிராயரது ஊர் குன்றை எனக் கூறும் குன்றிடம் (குண்டடம்) என்றும், கோத்திரம், மாடலர் கோத்திரம் என்றும், தமிழில் மிக வல்லவர் என்றும், இரண்டு புராணங்களைப் பாடியுள்ளார் என்றும் அறிகிறோம். இதைத்தவிர வேறு வரலாறுகள் கிடைக்கப்பெறவில்லை. அவரது மதம் சைவம் என்று அவரது துதிகளால் தெரியவரும். கொங்கணர், இடைஞானியார், வணிகனர் இவர்களைப்பற்றிப் புகழ்ந்து துதித்திருப்பது கவனிக்கத்தக்கது. புலவரது காலம் இன்னதென்று தெரியவில்லை சுமார் 100 ஆண்டுகளின்போது இவர் வாழ்ந்து இருக்கவேண்டும். இப்புலவருடைய சந்ததியார் குண்டடத்தைச் சார்ந்த ஒரு கிராமத்தில் இருக்கிறதாகக் கூறுகின்றனர்.

இளையான் கவிராயர் தமிழ்ச்செய்புள் இயற்றுவதிலும், அழகிய பொருள்களை எடுத்துச் சொல்வதிலும் மிகச் சிறந்தவர். இவர் இயற்றியுள்ள இரண்டு புராணங்களிலும் செய்யுள் நயமும் பொருள் நயமும் சிறந்து விளங்குகின்றன. தன் பெயர் உலகினர்க்கு எடுத்துக்காட்டவேண்டுமென்ற தற்பெருமை இல்லாதவர். இரண்டு தலங்களைப்பற்றியும் நன்றாக விசாரித்து அவைகளைப்பற்றி வழங்கி வந்த சகல ஐதிகங்களையும் ஆராய்ந்து புராணங்களை இயற்றியுள்ளார். புராணங்களை இயற்றும் போது வழக்கப்படி நாட்டுச் சிறப்பு நகரச் சிறப்பு இவைகளை முதலில் இப்புலவர் எடுத்தாளவில்லை. பழைய முறையின்படி சூதர் சௌனகாதிகளுக்கு எடுத்துச் சொன்னதாக மாத்திரம் கூறியுள்ளார். மேலும் தலங்களின் புனிதங்களையும் பெருமைகளையும் சொல்லும்போது அங்கே பூசித்தும் குளித்தும் அதனல் முத்தியடைந்தும் பாவங்கள் போக்கப் பெற்றும் உள்ள பத்தர்கள் சரிதங்களேயன்றி, சரித்திர சம்பந்தமான சரிதங்களையும் சேர்த்துப்பாடியிருத்தல் நோக்கத்தக்கது. உதாரணமாக, அவிநாசிப் புராணத்தில் சுந்தரமூர்த்தி நாயனர் சரித்திரமும் அப்பிரமேயத் தலப்புராணத்தில் கொங்கணர், இடைஞானியார், வணிகர் இவர்களைப்பற்றிய சரித்திரங்களும் சேர்த்திருப்பது பொருத்தமாக இருக்கின்றது. இச்சரித்திரங்களையும் அங்கே வழங்கி வந்த முறையிலேயே பாடியிருக்கின்றார்.

சுந்தரமூர்த்தி நாயனர் சரிதத்தில் அவிநாசிப் புராணத்தில் கண்ட வரலாற்றிற்கும் பெரிய புராண வரலாற்றிற்கும் பேதங்கள் உண்டு. பேரூர்ப் புராண வரலாற்றிற்கும் அது ஒத்து வருவதில்லை.

சுந்தரமூர்த்திகள் கொங்குநாட்டில் முதல் முறை விசயம் செய்ததைக் கூறுகையில் "குடக் கொங்கு" அடைந்தார் என்று மாத்திரம் கூறுகிறார். அப்போது நடந்த செய்திகளைக் கூறவில்லை. ஆனால் பேரூர்ப் புராணத்தில் அப்போது தான் சுவாமி பள்ளராய் நாற்று நட்ட திருவிளையாடல் நடந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இதனைக் கவிராயர் கடைசி விசயத்தில் வைத்துள்ளார். சுந்தரர் திருத்தில்லை நடனதரிசனத்தை, இங்கே கண்டதையும், அதைக்குறித்து சிதம்பரத்தில் சுந்தரமூர்த்திகள் தமது பதிகத்தில் வைத்து ஆண்டதையும் அவிநாசிப் புராணம் கூறுகிறதில்லை.

மேலும், சேரமான் பெருமாள் ஆம்பிர நதிக்கரையில் உள்ள வஞ்சியை அடைந்தார் என்றும், சுந்தரர் திருமுருகன் பூண்டியருகில் பறிகொடுத்த பொன்னை ஆலயத்துக் கணக்கன் மூலமாகப் பெற்றார் என்றும் கவிராயர் கூறுகிறார். இச்செய்திகள் மற்றைப்பழைய நூல்களில் இல்லை. சுந்தரர் காலத்திற் கரூருக்கு வஞ்சி என்ற பெயர் இருந்ததாகத் தெரியவில்லை.

இவையான் கவிராயர் கொங்குநாட்டைக் கேரள நாட்டின் பாகமாகக் கருதினது வியக்கத்தக்கது.

"சோன் நெடுஞ்செங் கோன்முறை என்னுந் திகழ்நாடு
கேளக் கொங்கப் பேர்ப்பிர சங்கம் கிளர்நாடு."

என்று கொங்குநாட்டை வருணித்திருக்கின்றார். சேக்கிழார் நாயனார் கொங்குநாட்டைத் தனியாகப் பிரித்தும் சேரநாட்டைத் தனியாகப் பிரித்தும் தம் வரலாற்றில் கூறினது கவனிக்கத்தக்கது.

இனி அவிநாசிப் புராணத்தில் மற்றொரு புதிய கதையைக் காண்கிறோம். சுந்தரர் அவிநாசிக்குப்போகும் வழியில் முருகேசம் (திருமுருகன் பூண்டி) அடைந்ததும் அங்கு பசி உண்டாகச் சிவபெருமான் வேதியனாக வந்து பொதி சோறு கொடுக்கத் தான் உண்டு கல்லில் கை துடைத்ததும் முதலாகிய அவிநாசிப் புராணக் கதை பெரிய புராணம் முதலிய புராணங்களில் இல்லை. இது ஒரு கர்ண பரம்பரையைத் தழுவி ஏற்பட்ட கதையாக இருக்கவேண்டும். ஆனால் இதற்கு திருப்புகழில் ஆதாரம் இருக்கின்றது. அவிநாசித் திருப்புகழில்

இதப்பட்டிட வேகம லாலய
வொருத்திக்கிசை வானபொனுயிர
மியற்றப்பதி தோறுமு லாவிய — தொண்டர்தாள
இசைக்கொக்கவி ராசத பாவினை
யுளப்பெற்றெடு பாடிட வேடையி
லிளைப்புக்கிட வார்மறை யோனென — வந்துகானில்
றிதப்பட்டெதி ரேபொதி சோறினை
யவிழ்த்திட்டவி நாசியி லேவரு
திசைக்குற்றச காயனு மாகிம — றைந்துபோமுன்

செழிப்பித்தக ராவதின் மாய்மக
வழைப்பித்த புராணைக்ரு பாகர
திருப்புக்கொளி யூருடை யார்புகழ் தம்பிரானே.

என்றிருப்பது காண்க. ஆகவே திருப்புகழை அனுசரித்துக் கவிராயர் இக்கதையை இயற்றினது நோக்கத்தக்கது. திருமுருகன் பூண்டியிலிருந்து அவிநாசிக்கு வரும்வழியில் ஒருபிள்ளையார் கோயிலும் கிணறும் இருக்கிற இடத்தை இன்றைக்கும் வழக்கத்தில் சுந்தரர் கோயில் என்று வழங்குகிறார்கள். அவ்விடத்தில் தான் சுந்தரமூர்த்திக்குச் சிவபெருமான் பொதி சோறு கொடுத்ததாகச் சொல்லுகிறார்கள்.

இனிச் சுந்தரமூர்த்திகள் அவிநாசியை விட்டுத் தடிசை சென்று அங்கு முருங்கைக் கீரை உண்டு அதன் பின் பேரூர் சென்றார் என்று கவிராயர் கூறுகின்றார். இச்சரிதை திருத்தடிசைப் புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இச்செய்தி பெரிய புராணம் முதலிய பழைய நூல்களில் கிடையாது.

ஆகவே இந்நூலாசிரியர் பெரிய புராணத்தை முக்கிய ஆதாரமாகக் கொள்ளாமல் பின்னால் உலாவி வந்த பல ஐதிகங்களை ஆதாரங்களாகக் கொண்டு நூல் இயற்றி இருக்கின்றார் என க் கூறலாம்.

அப்பிரமேயத் தலப் புராணத்தில் வாதிகச் சருக்கத்தில் சொல்லிய மலைநாட்டில் உள்ள கொச்சியைப்பற்றிய வருணனை அழகாக இருக்கின்றது.

"இத்தி றகங்களை நாடுதன்னிலிணை யெண்ணி லாதமுது பதிகளாய்
ஒத்தி ருப்பதினு முயர்வ தாயுலகி லும்ப ரூரைநிக ரொப்ப தாய்த்
தத்து வெள்வளையணிக் குலஞ்சி தறுதவள முத்தினெடு பவளவான்
கொத்து மெத்துற தரங்க வங்கைகொடு குடக டற்பரவு கொச்சியே.

என்ற செய்யுளால் இந்நூல் மிகச் சமீபகாலத்தது என அறியலாம். ஒரு கொச்சி வணிகன் மிளகை மிளகல்ல என்று ஏமாற்றினவுடன் அது மிளகாகாமல் போய்ப் பின் திகைத்துக் கடவுளை வழிபட்டு அது மிளகான கதை இதில் கூறப்பெற்றுள்ளது. இது கொங்கு நாட்டுக் கர்ன பரம்பரைகளில் ஒன்று. இவ்வரலாற்றை அழகிய செய்யுள்களில் நமது கவிஞர் கூறியிருக்கின்றார்.

கோவைக் கிழார்.

ஒன்பது.

(முன்பக்கத் தொடர்ச்சி.)

6. உலகை ஆட்சிபுரிந்து ஆட்டி ஓட்டிவருகின்றவர்கள் ஒன்பது பேர். அவர்களே நவநாயகர்கள் அல்லது நவக்கிரகங்கள் என்பர். இவர்கள் ஒன்பது அண்டங்களின் அதி தெய்வங்கள்.

நவநாயகர்கள்

இவர்கள் ஒன்பது பேர் ஆகின்ற வகையும் காரணமும் இவர்களது சத்தியும் சாத்திரங்களிற் காண்க நவசத்தி என்பதும் இவ்வாறே.

(7) உலகு முழுமுதற் கடவுளாகிய இறைவன் கொள்ளும் திருமேனிகளும் ஒன்பதேயாம் என்று உண்மைகண்ட சாத்திரங்கள் எடுத்துக்கூறும். "நவந்தரு பேதமாகி நாதனே நடிப்பன்" என்பர். அவையே அருவம் நால்—உருவம் நால்—உபயம் ஒன்றும்—என்றும் கூறுவர். இவற்றை உருவம்—அருவுருவம்—அருவம் என்ற திருமேனிகள் என்பர். உருவத்திலே பிரமா—விட்டுணு—உருத்திரன்—மகேசன என்ற நான்கும் அருவுருவத்திலே சதாசிவம் என்ற ஒன்றும், அருவத்திலே சத்தி—சிவம்—நாதம்—விந்து என்ற நான்கும் ஆக இவை அவ்வொன்பது திருமேனிகளாம். இது சாத்திர முடிவு. இவற்றின் விரிவுகள் பெரியோர்களிடம் முறையிற் கேட்கத்தக்கன. இவ்வொன்பதில் அடங்காத கடவுள் இலக்கணம் வேறில்லை என்பது துணிபு.

கடவுள் திருமேனி ஒன்பது

8. மேலே கூறியவற்றுல் ஒன்பது என்ற எண்ணின் சிறப்பு நன்கு விளங்கும். எத்தனை வகையாலே பெருக்கிக் கூட்டினாலும் வினையும் அவற்றிற்குள் எல்லாம் தானே ஒளித்து விரிந்து இறுதியில் வெளிப்படுவது இதன் சிறப்புகளில் ஒன்றாகும்

இது மேலே (4) (5) பிரிவுகளின் ஒருவாறு காட்டப்பெற்றது. உலகில் உள்ள மக்களின்செய்கைகள் எல்லாம் அவ்வாறேதான் என்பது சிறிது ஊன்றிப்பார்த்தால் விளங்கும். எவ்வளவு பெருமையாகவோ விளக்கமாகவோ ஒருவன் காணப்பட்டாலும் அப்பெருமைகளுக் கெல்லாம் உள்ளுறையாய் அவனுடைய ஆன்ம இயல்பாகிய **நான்** என்பது மறைந்து உள்ளே உறைந்து கிடப்பதைக் காணலாம். இவ்**வொன்பதின்** சத்தியிலிருந்து தப்பினவர் மிகப்பெரியவர்களேயாவர்.

ஆணவ சக்தி யாகிய ஆன்ம இயல்பு

9. மேலே எடுத்துக் காட்டியவற்றையும் இன்னும் ஆழ்ந்த பல கருத்துக்களையும் உள்ளடக்கியே அப்பர் சுவாமிகள் மேலே தலைப்பிற் கண்ட தேவாரத் திருப்பாசுரத்தை அருளினர் என்று தோன்றுகிறது. **"ஒன்பதொத்து நின்று என்னுள் ஒடுங்குமே"** என்பதனை உற்றுநோக்குக. இத் திருப்பாடலின் பொருள் எனக்குத் தெரிந்த மட்டில் எழுதுகின்றேன்.

கடவுள் இயலும் அப்பர் தேவாரமும்

(பொருள்)— ஒன்ப தொன்பதியானை = எண்பத்தொரு பதங்களாற் குறிக்கப் பெறும் பொருளாயுள்ள இறைவனை;

ஒளிகளி ஒன்பது தொன்பது பல்கணம்சூழ = ஒளியும் (அறிவு விளக்கமும்) ஆனந்தமும் உடைய பதினெண் கணங்களும் சூழ்ந்து அனுபவித்துக்கொண்டிருக்கவும்; (ஒளியாலறிந்து சூழ்ந்து களித்திருக்கவும்.)—(என்செயல் அவ்வாறு அல்லாது)—

ஒன்பதாமவை தீத் தொழிலின்னுரை = தீய முக்குண வசப்பட்டு நிகழ்கின்ற எனது முக்கரணங்களின் தொழிலும் சொல்லும்—(முக்கரணம் = மனம், வாக்கு, காயம்: தொழில்—மனத் தொழிலும் காயத்தொழிலுமாம். சொல் = வாக்கின் தொழில்.) முக்குணத்திலே முக்கரணங்களும் நிகழ ஒன்பது வகைக்காரியங்கள் தோன்றும் என்பது கருத்துப்போலும்:

ஒன்பதொத்து நின்று என்னுள் ஒடுங்குமே = எத்தனை வகையாகப் பெருகினும் மேலே காட்டியவாறு என்செயல்கள் எல்லாம்

நான் என்ற ஆணவத்தின்பாற்பட்டு என்னுள்ளேயே வந்து ஒடுங்கி விடுகின்றன என்பதாம்.

10. நற்கணங்களின் செயல்போல் இறைவனைச்சூழாது ஒன்பதாகிய என் தித்தொழிலும் உரையும் என்னையே சூழ்ந்துகொண்டிருக்கின்றன. நான் என்ற ஆணவத்திலேயே கிளம்பி விரிந்து அதனுள்ளேயே ஒடுங்கிவிடுகின்றன:— என்பது கருத்துப்போலும். இங்குக் கணங்கள் என்பன தற்போதமில்லாமல் இறைவனையே வழிபடும் நல்லுயிர்களாம். இவையே சிவகணங்கள்-எனவும் "பூத பரம்பரை" எனவும் பெறும். "கண்ணுர் பதினெண் கணங்கள் தம் அட்டமி நாள்" என்ற தமிழ்வேதப் பிரமாணத்தையும் காண்க.

11. ஆகவே கணிதக் கலைஞானத்தால் அறியப்படும் ஒன்பதின் சிறப்பும் சத்தியும் எவ்வளவு பெரிது பாருங்கள்! இத்தனை பெருமையும் அறிந்து **ஒன்பது ஒத்து** என்று ஒரு சிறிய உவமானத்திலே ஒடுக்கி அடக்கி மேலே போய் அதிலிருந்து ஆணவத் தன்மையை விளக்கிக்காட்டி உலகத்தை வழிப்படுத்திய ஆசாரியராகிய அப்பர் சுவாமிகளுடைய உபதேச மொழியின் பெருமை அதைவிட எவ்வளவு பெரிது பாருங்கள்!! நமது முன்னோர்களையும் அவர்கள் எடுத்துக்கூறிய ஞான மொழிகளையும் அலட்சியம் செய்தொழுகும் மேலறிவாளர்கள் இக்கருத்துக்களைச் சிந்திப்பார்களாக.

C. K. சுப்பிரமணிய முதலியார் B. A.

பூகம்பம்.

(முன் தொடர்ச்சி.)

6. உலகின் ஏனைய பாகங்களில் நிகழ்ந்துள்ள பூகம்பங்களும் அவற்றால் உலகம் அடைந்துள்ள தொல்லைகளும் பல பல. 1725-ம் ஆண்டில் லிஸ்பன் பட்டிணத்தில் ஏற்பட்ட பூகம்பத்தில் 60,000 மக்கள் மாண்டனர். பெரும் பிரதேசம் நீர்க் கிரையாயிற்று. வட அமெரிக்காவில் 1886-ம் ஆண்டு உண்டான பூகம்பத்தால் 1500 மைல் பாழாயிற்று. 1923-ம் ஆண்டு யோகோகாமா, டோகியோ ஆய

பிறஇடங்களில் நிகழ்ந்த பூகம்பங்களில் சில.

ஜப்பான் நகரங்களில் நிகழ்ந்த பூகம்பத்தால் 1,42,807 மக்கள் நெருப்பிற்கு இறையாயினர். 1,000,000,000 பவுன் மதிப்புள்ள சொத்துக்கள் நஷ்டமாயின. இவ்வாறு உலகிற்கு எண்ணுதற்கரிய இன்னல்களை விளைவிக்கும் இக்கொடிய நிகழ்ச்சிகளையும், இவை ஏற்படவேண்டிய காரணங்களையும் ஆராய்வோம்.

7. பூகம்பமானது பூமியின் மேற்றோட்டில் உண்டாகக்கூடிய தாகையால், பூமியின் உற்பத்தியைப் பற்றியும் அதன் அமைப்பைப் பற்றியும் (Constitution of the earth) முன்னர் அறிய வேண்டியது அவசியமாகிறது. இவைகளைப்பற்றிப் பல கிறப்பட்ட எண்ணங்கள் உலவிவருகின்றன.

படைப்பின் இரகசியம்.

படைப்பைப்பற்றிய இரகசியம் அளப்பதற்கரிதாய் விரிகின்றது. எனினும் கூர்த்த மதியினரின் ஆராய்ச்சி பெருகியே வருகின்றது.* இற்றைக்கு 1600 ஆண்டுகட்கு முன்னர் திகழ்ந்த மணிவாசகனார், தில்லையில் அருளிய திருவண்டப்பகுதியில் இவ்இரகசியத்தைப்பற்றிக் கூறுகின்றமை நோக்கற்பாலது.

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப் பருந்தன்மை வளப்பருங்காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன."

தேரையர் படைப்பைப்பற்றி பின் வருமாறு கூறுகின்றார்.

"தேடருமகண்டவொளிப் பிழம்பாய்ஞான
தீதபூரணமாய்த்தற் செயல்கொண்டெல்லா

---

* We are yet far from a complete solution of this grandest of all Un-discovered secrets, the origin of the Universe, but the efforts to penetrate beyond the veil will go on unceasingly."

Earth, evolution & its facial expression.

W. H. Hobbs.

"There are such profound secrets and such lofty conceptions that the night labours and researches of hundreads and yet hundreads of keenest minds in investigations extending over thousands of years, would not penetrate them, and the delight of searching and finding endures for ever."

Galileo.

மூடவிடவல்லதுமாய்த் தனித்தவொன்றுண்
மூழ்கிநின்றமுக்குணச்சிற் சத்திதன்னில்
நாடனம்பிறந்ததிற்கா லுதித்ததிற்றீ
நாமமண்ணுண்டாய் மண்தானல்க வந்த
ஓடதியிலனமுமதி லுலகுகிற்கு
முயர்வாய்ந்தவ்வோடதியி னுரிமைசொல்வாம்."

"ஏரண முருவம் யோக மிசைக் கணக்கிரதஞ் சாலம்
தாரண மறமே சந்தந் தம்மநீர் நிலமு லோகம்
ஆரணம் பொருளென் றின்ன மானநூல் யாவும் வாரி
வாரணங் கொண்ட தந்தோ வழிவழிப் பெயரு மாள."

என்ற பழம் பாட்டுப்படி நம் நாட்டின் பல கலைகளும் அழிந்தொழிந்தமையால் நாம் மேலை நாட்டு அறிஞர்களின் ஆராய்ச்சி முடிவை நாடவேண்டிய நிலையிலிருக்கின்றோம்.

பூமியின் உற்பத்தியும் அமைப்பும்: பூகம்பம் நிகழ்தலும்.

8. மேனாட்டினரில் ஓர் சாரார் பூமியானது சூரியனிடமிருந்து சிதரியதோர் திவலை என்பர். பிறிதொரு சாரார் பலகிறு கோள்களும், விண்மீன்களும் ஆகர்ஷண சக்தியால் இழுக்கப்பட்டு ஒன்று சேர்ந்தமையால் உண்டாய தென்பர். பூமியின் நடுக்கோட்டுப்பகுதியின் குறுக்களவு (Equatorial Diameter) 7,926 மைல். பூமியின் உள்பாகத்தை மூன்று பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம். பூமியின் மத்திப்பகுதி, இடைப்பகுதி, மேற்பகுதி எனக் கூறலாம். மத்திப்பகுதி இருப்பும் கல்லுமானது, இடைப்பகுதி நிக்கலும் இரும்புமானது, மேற்பகுதி கல்லானது (core, of iron—stone; intermediate, shell of Nichel & iron; outer, shell of stone) பூமியானது அதினுடைய விண் வட்டத்தில் (Orbit) ஒரு நிமிடத்திற்கு 3000 மைல் வீதம் போய்க்கொண்டிருக்கிறது. நடுக் கோட்டுப்பகுதிக்கு அருகில் உள்ள பிரதேசங்கள் மணிக்கு 1000 மைல் வீதம் பூமியின் அச்சில் சுற்றுகிறது. பூமியின் மேற்பரப்பு ஒரே மட்டமாய் இராமல் மேடும் பள்ளமுமாயிருப்பதால் பூமி சுற்றும்பொழுது அது சதா

நடுங்கிக்கொண்டிருக்கிறது. *அச்சில் நன்றாய் முறுக்கப்படாத சக்கரம் சுற்றும்பொழுது நடுங்குவதுபோல் ஞாலத்தின் மேற்பரப்பில் நன்றாய் இறுகாத பாகம் அது சுற்றும்பொழுது மிகவும் நடுங்குகின்றது. சீதோஷ்ண மாறுதலாலும், மேலே கவிந்துள்ள காற்றின் கனத்தாலும், பனி மழை முதலியவையாலும், கடல் பொங்குவதாலும் வடிவதாலும், புயற்காற்றுகள் பாறைகளின்மேல் போதுவதாலும், பெரும் அலைகள் சதா கடற்கரைகளில் அறைவதாலும் மலைகளின் உச்சியிலிருந்தும், கடற்கரை ஓரங்களிலிருந்தும், பெரும் பாறைகளும் கற்களும், மண்கட்டிகளும் உருண்டு விழுவதாலும் பூமியின் மேற்பரப்பு தாக்கப்படுகிறது. பெரும் பகுதிகள் ஆதாரவற்று அடியில் மூழ்கும் போதும் மேற்பரப்பு மடிந்து சுருங்கும் போதும் (folding) உக்கிரமாக பூமியின் மேற்பரப்பு ஆட்டப்பட்டு அதிர்ச்சி அலைகள் உண்டாகின்றன. இவ்வதிர்ச்சிகளால் சிறு பொருள்களை ஆட்டும் பூகம்பத்திலிருந்து பெரும் மாகாணங்கள் அடியோடு அழியக்கூடிய வேகமுள்ள பூகம்பங்கள் வரை உண்டாகும்.

பூகம்பத்தின் தன்மைகள்.

9. பூகம்பங்களின் கொடுமைத் தன்மையைக் கொண்டு இவைகளைப் பத்து வகையாகப் பிரிக்கலாம். (1) பூமி அதிர்ச்சியைக் கண்டு பிடிக்கும் கருவிகளான பூகம்ப நிதானிகளால் (Seismographs) மட்டும் அறியக்கூடிய இலேசான அதிர்ச்சிகள். (2) தூங்கிக்கொண்டிருக்கும் ஒருசிலரால் மட்டும் அறியக்கூடியது. (3) படுத்துக்கொண்டு விழுத்திருக்கும் பலராலும் அறியக்கூடியது. (4) நடந்துகொண்டிருப்பவர்களால் மட்டும் அறியக்கூடியது, சிறு பொருள்கள் அசையும், ஒட்டுப்போட்டுள்ள மேல்த்தளங்கள் கீறும். (5) யாவராலும் அறியப்படும் தட்டுமுட்டுச் சாமான்கள் இடம் விட்டுத்தள்ளப்படும்; தொங்கிக்கொண்டிருக்கும் விளக்குகள் ஆடும்,

---

* "The earth's crest is in constant tremor."

Elements of Economic geology.

J. W. Gregory.

சிறுமணிகள் தானே அடிபடும். (6) தூங்குகின்றவர்கள் விழிப் பார்கள், மரங்கள் அலைக்கப்படும், கடிகாரம் நின்றுவிடும். (7) பெரிய கோயில் மணிகள் அடிபடும், பொருள்களைக் குப்புறத்தள்ளும். திகிலையும் பயத்தையும் விளைக்கும், பெருநஷ்டத்தை உண்டாக்கும், (8) கூடகோபுரங்கள் கீழே விழுந்துவிடும், சுவர்கள் இடிந்து விழுந்துவிடும், பாதலத்திலிருந்து தண்ணீர் மேலேவந்து பெருகும். (9) கட்டடங்கள் பொடிப் பொடியாகும் ஆற்றின் போக்குகள் மாற்றப்படும். மிகக்கொடியது. (10) மிகமிகக் கொடியது பெருநிலப் பரப்புகளையும், மாகாணங்களையும் பாழாக்கக்கூடியது.

(தொடரும்.)

S. நடராஜன் B. A.

திருப்பூந்துருத்தி திருநாவுக்கரசர் திருமடம்.

திருப்பணி நிதி.

சென்ற சஞ்சிகையில் இத்திருமடத்தைப்பற்றி நமது பத்திரிகையில் எழுதியிருந்தோம். அதனைக் கண்ணுற்ற அன்பர் பலர் அத்திருப்பணியின் பொருட்டு ஒரு நிதி நமது பத்திரிகையின் மூலம் சேகரிக்கவேண்டுமென்று விரும்பி நமக்குத் தெரிவித்தார்கள். ஆதலால் இது முதல் நமது பத்திரிகையின் மூலம் அத்திருப்பணிக்கு ஒரு நிதி சேகரித்துவரத் தொடங்கியுள்ளோம். இதில் அனுதாபமுள்ள அன்பர்கள் யாவரும் தங்களால் இயன்ற பொருளை நமக்கு அனுப்பினால் அதனை அவ்வப்போது பிரசுரித்து வருவோம். தகுந்த அளவு பொருள் சேர்ந்தபின் உரியபடி திருப்பணிகள் அன்பர்களுக்கு அறிவித்துச் செய்விக்கத் தொடங்குவோம். இப்பெரும் சிவபுண்ணியத்தில் அன்பர்களின் உதவி எத்தகைச் சிறிதாயினும் அன்புடன் ஏற்று உரியபடி உபயோகிக்கப்பெறும். சிவபெருமானிடத்திலும் திருநாவுக்கரசுசுவாமிகளிடத்திலும் தமிழிலும் அன்புள்ள யாவரும் இதில் கலந்து முயற்சிப்பார்களாக.

உதவிபுரியும் அன்பர் விபரம்.

சித்திவிநாயகர்	ரூ.	1	0	0
C. K. சுப்பிரமணிய முதலியார்	,,	9	0	0
C. M. இராமச்சந்திரஞ் செட்டியார்	,,	10	0	0

பத்திராதிபர்.

சமயப் பகுதி.

பெரிய புராண வெளியீடு.

(உரையுடன்)

பெரிய புராணமானது சைவமக்களுக்கேயன்றித் தமிழ் மக்களுக்கும் மிகவும் உரிமையானதொரு சிறந்த நூல். மேலும் அதனூற் பெறும் பயன்வகையாலே உலகமுழுதும் செல்வது. அதனை மக்கள் எவ்வளவிற்குப் பயின்று பயன் பெறவேண்டுமோ அவ்வளவிற்குப் பயிலாமல் இருந்துவருவது வருந்தத்தக்கதொன்றாகும். சென்ற சில ஆண்டுகளாகத் தமிழுலகம் சிறிது விழித்து எழுந்து பெரிய புராணத்தின் பெருமையைப்பற்றிப் பேசவும் எழுதவும் சிந்திக்கவும் தொடங்கியிருப்பதுகண்டு மகிழ்கின்றோம். இம்மை என்ற நிலைமையிலேயும் அம்மை என்ற மறு உலக நிலையிலேயும் ஆன்மக்கள் அறிந்து அடையவேண்டிய உறுதிகளை எல்லாம் இதிற்பரக்க உணரலாம். இவற்றின் மேலும் உள்ளதாக அறியப்பெறுகின்ற வீடு என்ற மோட்ச நிலைக்கும் உயிர்களுக்கு உற்ற உதவி செய்கின்றது இந்நூலாகும். இதுவே இதனைப்பற்றி அறிவுடையோர் கொண்ட கொள்கையும் எண்ணமுமாம். தமிழ் மொழியின் இலக்கிய வகையிலே வைத்துக் காண்பவர்களாகிய கவி வல்லார்கள் எல்லாம் இதனைத் தமிழ்மொழிக்குச் சிறந்த அணிகலமாகவும் பேரிலக்கியமாகவும் கொண்டிருக்கின்றனர். இந்நாட்டில் தமிழ் அரசர்களின் அரசாங்கம் மிகப்பெரிய நிலையில் இருந்த காலத்தில் அமைச்சராயமர்ந்த ஒரு பெரும் புலவரால் உலகத்திற்கு உபகாரமாக இந்நூல் இயற்றப்பெற்றதென்ற ஒன்றே இதனை என்றும் உலகத்தாரின் கவனத்திற்கு உரித்தாக்கும். மேலும் ஒருசிறந்த ஞானநூலாதலின் எக்காலத்தும் எவ்விடத்திலும் இது கூர்ந்து பயில்வதற்குரியது. இதன் செய்யுள் நடை மேற்பார்வைக்கு மிகளிதாகவும் செம்பாகமாகவும் இருக்கும். ஆயின் உள்நுழைந்து கூர்ந்து பார்க்கப்பார்க்க இச்செய்யுள்களிலே புதையலாகப் பெரும் பொருள்கள் மலிந்து கிடக்கும்.

இந்நூலுக்கு பலபேர் உரை எழுதியுமுள்ளார்கள். அவற்றுள் ஸ்ரீ. ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் உரையானது அச்சிட்டு வெளியாகி அனேக ஆண்டுகளாயின. இதன் பிரதிகள் இப்போது கிடைத்தலரிதாயின. அன்றியும் அவ்வுரை மிக விரிவாயும் அதிக விலை கொடுத்துப் பெறவேண்டியதாயும் உள்ளதாம். அதற்கு முன்னும் சில பழைய உரைகள் உண்டு. அவை இப்போது கிடையா. காஞ்சீபுரம் திரு. ஆலாலசுந்தரம் பிள்ளை அவர்கள் மிகவிரிவான ஓர் உரை எழுதியுள்ளார் என்று தெரிகிறது. அதில் சில சுருக்கங்களே வெளிவந்துள்ளன. அதுவும் மிக விரிவாயும் பெருவிலை கொடுத்துப் பெறவேண்டியதாயும் உள்ளதாம். சமீபத்தில் அன்பர் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் ஆராய்ச்சிக் குறிப்புரையுடன் சஞ்சிகை உருவத்தில் வெளிப்படுத்தி வரும் வெளியீடு விரைவில் நிறைவேறும். இதில் சுருக்கமாகவேனும் ஒவ்வொரு பாட்டிற்கும் பொழிப்புரை இல்லை. ஆகவே இச்சிறந்த நூலுக்கு இலகுவான விலையில் புராண முழுதும் உரையுடன் உணரக்கூடியதொரு நல்ல பதிப்புத் தற்காலம் இல்லை. இக்குறையை நீக்கும் பொருட்டு இவ்வெளியீடு கோவைத் தமிழ்ச் சங்கத்தின் மூலம் வெளியிடஎண்ணி உரையும் குறிப்புகளும் எழுதப்பெற்றுவருகின்றன. இதில் ஒவ்வொரு பாட்டுக்கும் சுருக்கமான பொழிப்புரை அங்கங்கே விசேட உரைக் குறிப்புகளும் இயன்ற அளவில் தேவாரமாதி அருணூல்களின் மேற்கோள்களும் தரப்பெறுவனவாம். நாயன்மார் அவதரித்த தலங்கள், ஆசாரியர்கள் சென்று அருளிய தலங்கள் முதலிய முக்கியமான தலக் குறிப்புகளும் படங்களும் இதிற் காணலாம். இதனை நியதிக்காகப் பாராயணம் செய்வோர் அவ்வந் நாள்களில் வாசித்து நிறுத்தக் கூடிய இடங்களையும் இது காட்டும். பல ஏட்டுப் பிரதிகளை ஒத்துப் பார்த்து வருவதிற்காணும் அவசியமான பாடபேதங்களும் இதிற் குறிக்கப்பெறும்.

இதனைப்பற்றிய குறிப்புகள் பின்னரும் கொங்குமலரில் வெளிவரும். தமிழ் உலகம் இதனை ஆதரிப்பதாக.

C. K. சுப்பிரமணிய முதலியார், B. A.,

ஆராய்ச்சிப் பகுதி.

மருதமலையைப்பற்றிய கல்வெட்டுகள்.

மருதமலை என்ற திருத்தலம் கோவைக்கு வடமேற்கில் குன்று தோறுடல்களில் ஒன்றாய் முருகக் கடவுளின் ஒரு புனிதத் தலமாகும். இது மேற்குமலைத் தொடரில் சமநிலத்திற்குச் சுமார் 500 அடி உயர்ந்த ஒரு அழகிய சிறு சமநிலத்தில் எற்பட்டுள்ளது. அங்கே மருத தீர்த்தம் என்ற திவ்விய தீர்த்தம் ஒன்று மருத மரத் தடியில் உள்ளது. அருகில் உள்ள முருகக் கடவுளின் ஆலயம் மிகச் சிறந்து விளங்குகிறது. இதில் எழுந்தருளியிருக்கும் தண்டபாணி யாகிய முருகக் கடவுளை வழிபாடு செய்யாதவர் அனேகமாய் இந் நாட்டில் இரார். அடிவாரத்தில் உள்ள தான்றோன்றிப்பிள்ளையாரது அழகிய இயற்கை அமைப்பு வேறெங்கும் காண்பதரிது. மிகத் திவ்வியத் தலமாகிய இம்மலையின் பெயரை இந்நாட்டுமக்கள் இட்டுக் கொள்வது ஒரு வியப்பல்ல. கொங்கு நாட்டில் மருதமலைக் கவுண் டன், மருதாசலம்பிள்ளை முதலிய பெயர்கள் எங்கும் பரவி இருக்கக் காணலாம். பழனியப்பன் பழனிமலை என்ற பேர்கள் எவ்வளவு அதிகமாக வழங்குகின்றனவோ அவ்விதம் மருதமலையும் வழங்குகிறது.

இத்திவ்வியத்தலம் மிகப் பழைமை வாய்ந்தது எனலாம். ஆனால் அதன் சரித்திரம் கிடையாதது மிகவும் வருந்தத்தக்கது. மலைமீதுள்ள அழகிய ஆலயத்தில் கல்வெட்டுகள் கிடையா. இத் தலத்துக்கு அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியிருக்கிறார். இத் தலத்தைப்பற்றிய தனிப்புராணம் இல்லை. ஆனால் கச்சியப்ப முனி வர் அருளின திருப்பேரூர்ப் புராணத்தில் இம்மலையைப்பற்றி இரண்டு படலங்கள் இருக்கின்றன. இதன் வடமொழி மூலநூல் இதற்குச் சில நூற்றாண்டுகள் முந்தியதாகலாம். இவற்றின் விரிவை அறியவேண்டுமானால் மருதமலை மான்மியம் என்ற நூலில் காண லாம். பேரூர் புராணமோ 150 ஆண்டுகளுக்கு முன் தான் எழுதப்

பெற்றது. ஆகவே சுமார் 300 வருடங்களுக்கு முந்திய சரிதம் கிடைக்காமல் இருக்கிறோம். பேரூர்ப் புராணத்தில் இத்தலம் மிகப் பழமையானதாயும் இதில் தேவர்கள் தவம் செய்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனல் இம்மலையின் பெயரை மக்கள் வெகு காலத்திலிருந்து தமக்கு இட்டுவந்தனர் என்பதற்கு இந்நாட்டு வழக்கமே அத்தாட்சியாகும். மக்கள் இம்மலையின் பெயரைத் தமக்கு இட்டுக்கொண்ட ஒரு வழக்கம் 12-ம் நூற்றாண்டிலும் இருந்ததாகத் தெரிகிறது. ஆகவே அந்த நூற்றாண்டிலேயே இம்மலையில் எழுந்தருளியிருந்த முருகக் கடவுளின் ஆலயம் சிறந்து விளங்கி இருக்கவேண்டும் என்று தெரிகிறது. இந்தக் கூற்றுக்கு இப்போது கிடைத்துள்ள ஆதாரங்கள் எவையெனில் இம்மலைக்குக் கிழக்கே 32 நாழிகை அளவில் உள்ள பாடல் பெற்ற தலமாகிய திருமுருகன் பூண்டி ஆலயத்தில் உள்ள இரண்டு கல்வெட்டுகளே ஆகும். இக்கல்வெட்டுகள் அடியில் கண்டபடி உள்ளன.

No. 249
(A. R. No. 573 of 1893)

1. ஸ ஸ்ரீ ஸ்ரீ [: 11] திரிபுவநச்சக்காவத்திகள் ஸ்ரீ குலொத்
வ த
துங்க சொழதெவர்க்கு யாண்டு எட்டாவது பெருமாள் சாமந்தரில் மருதன்மலையநாந குலொத்துங்க சொழ விக்கிரமாதித்த தெவனென் ஆழுடையார் திருமுருகன் பூண்டியாண்டாற்கு சந்தியா திபம் ஒன்றுக்கு ஒடுக்

2. கின பழஞ்சலாகை அச்சு ஒன்றின் உபயங்கொண்டு சந்தி யாதிப(ம்) மொன்றும் சன்திராதித்தவற் செல்வதாக இது பன்மா ஹேஸ்வரவசை.

No. 250.
(A. R. No. 574 of 1893)

1. ஸ ஸ்ரீ ஸ்ரீ திரிபுவனச் சக்ரவத்திகள் சிரிகுலொத்துங்க சொழ
வ த
தெவற்க்கு யாண்டு எட்டாவது பெருமாள் சாமந்தரில் மருதன்மல

யனை குலொத்துங்க சொழ விக்கிரமாதித்த தெவநெந் ஆளுடை யார் திருக்குரக்குத் தளியாண்டாற்கு சந்தியாதிப மொன்றுக்கு ஒடுக்கின பழஞ்ச.

2. லாகை ஒன்றி நுபையங்கொண்டு சந்தியாதிப மொன்றும் சந்திராதித்தவற் செல்வதாக இது பங்மா கெசுர ரமெஷ.

இக் கல்வெட்டுகளினுல் **குலோத்துங்க சோழ** தேவனது 8-ம் ஆண்டில் அம்மன்னனுடைய சாமந்தரில் (சிற்றரசன்) **மருதன் மலையான்** என்ற ஒரு பிரபு இருந்தான் என்றும் அவன் அரசர்களுக்குச் செய்த உதவியின் பொருட்டு **குலோத்துங்கச் சோழ விக்கிர மாதித்திய தேவன்** என்ற பட்டம் பெற்றிருந்தான் என்றும் அவன் திருமுருகன் பூண்டியில் எழிந்தருளியிருக்கிற மகா தேவர்க்கும் திருக்குரக்குத்தளி என்ற வைப்புத்தலமாகிய பெரிய பாளையத்துச் சுக்கிரீசுவர சுவாமிக்கும் சந்தியா தீபம் லைப்பதற்காக பழஞ் சலாகை அச்சு என்ற பொன் நாணயம் ஒன்று தருமம் செய்ததாகவும் இன்னும் இவைமுதலிய செய்திகளும் காண்கிறோம். குலோத்துங்கச் சோழன் என்பான் கொங்குநாட்டை ஆண்ட கொங்கு சோழனுக இருக்கலாம் அப்படியாயின் அவனே கி. பி. 1149-1183 வரை ஆண்ட மன்னன் ஆவான். ஒரு வேளை சோழ மன்னனுக இருக்கும் பட்சத்தில் அப்பெயர்கொண்ட மூன்று மன்னர்களில் ஒருவனுக இருக்கவேண்டும். அவர்கள் முறையே கி. பி. 1073, 1123, 1178 என்ற ஆண்டுகளில் ஆண்டவர்கள். இக்கல்வெட்டில் குறித்த அரசன் அவர்களில் ஒருவன் ஆனபோதிலும் 12-ம் நூற்றாண்டுக் கல்வெட்டு என்று அறியலாகும். அக்காலத்தில் அவ்வரசனுடைய பிரபுக்களில் ஒருவன் **மருதன் மலையன்** என்ற சிறப்புப் பெயர் பெற்றிருக்கவேண்டும். இவ்வழக்கம் எத்தனைப் பழையது என்று பாருங்கள்! இரண்டாவது சாசனத்தால் **பெரிய பாளையத்திற்கு** குரக்குத்தளி என்று வழங்கி வந்ததும் அறிகிறோம். இத்தலம் திருப்பூருக்கு 3 நாழிகையில் உள்ள ஒரு ஊர். கூனிபாளையத்திலிருந்து கால்நடையாக 2 மைலில் இதனை அடையலாம். இதனை

(32-ம் பக்கம் பார்க்க.)

ஒழிபு.

தமிழ் மறந்த தலைநகர்

(திருவஞ்சைக்களம்.)

இப்போதைக்கு 1109 ஆண்டுகளுக்கு முன்னர் வந்த ஆடி-மீ த்தில் சுவாதி நாளிலே திருவஞ்சைகளத் திருக்கோயிலின் முன்னே வெள்ளையானை வந்து நின்றது. அதனோடு இந்திரன், திருமால், பிர மன், முதலியதேவர்களும் வந்து நின்றார்கள். இவர்கள் வந்து கோயில் திருவாயிலிற் சேரவும் உள்ளிருந்து சுவாமி கும்பிட்டுச் சுந்தரமூர்த்தி நாயனார் வெளிவந்து திருவாயிற் சேரவும் காலம் சரி யாய் ஒத்திருந்தது. சுந்தரர் அன்றையநாள் அஞ்சையப்பராகிய சுவாமியைக் கும்பிட்டபோது அருளிய தேவாரத்தில் "வெறுத் தேன்மனை வாழ்க்கையை விட்டடியேன்" என்ற உட்குறிப்புடன் தோத்திரித்து முத்திவிண்ணப்பம் செய்துகொண்டார். அதாவது சுவாமி! அடியேன் இவ்வுலகவாழ்க்கையை வெறுத்தேன். தேவரீரு டைய ஆணையிட்டு இவ்வுலகில் நான் பிறந்து செய்யவேண்டிய காரி யங்கள் யாவும் நிறைவேறின இனி இவ்வுலகவாழ்வு எனக்கு வேண் டாம். பழையபடி தேவரீரிடம் இருக்கும் பெருவாழ்வை வேண்டு கின்றேன். என்னைத் தேவரீரிடம் அழைத்துக்கொள்ளும் என்பது அவர் பாடியபதிகத்தின் உட்குறிப்பாம். இந்த பிரார்த்தனையைக் கேட்ட கைலாசநாதர் உடனே கயிலையிலிருந்து இவரை அழைத்து வரத் தேவர்களுடன் வெள்ளையானையை அனுப்பி யருளினர். அதன்படி யானையும், தேவரும் அன்று அஞ்சைக்களக்கோயில் திருவாயிலில் நின்றார்கள். சுந்தரர் திருவாயில் வந்ததும் இறை வனுடைய திருவாணையை தேவர்கள் அறிவித்தனர். உடனே அவ ரும் கைதொழுது கயிலை செல்வதற்கு வெள்ளையானையின் மீது ஏறிக்கொண்டார். ஆனல் தமது ஆருயிர் நண்பராகிய சேரமான் பெருமாள் நாயனரை மனத்தில் நினைத்துக்கொண்டே யானை மீதேறினர். சுந்தரருடனே யானையும் தேவரும் ஆகாயவழி கயிலையை நோக்கிச்சென்றனர் அன்று சுந்தரர் திருவஞ்சைக்களத் தைக்கு வரும்போது கொடுங்கோளூரில் தமது அரண்மனையில் சேர

மான் பெருமாள் குளித்துக்கொண்டிருந்தார். சுந்தரர் சந்நிதியில் பாடிய பதிகத்தின் கருத்து எவ்வாறு திருக்கயிலையில் எட்டி உடனே யானையை வரவழைத்ததோ அதுபோலவே அவர் தோழரை நினைந்த எண்ணம் கொடுங்கோளூரிலே பெருமானைச்சேர்ந்து தாக்கிற்று. குளித்து வெளிவந்ததும் அவர் தமது உயிர் நண்பராகிய நம்பியாரூரரை வினவி அறிந்து குதிரைமீதேறி அஞ்சைக் களத்துக்குவிரைந்து வந்தார். தமது நண்பர் பெருமான் வெள்ளையானையின் மேல் ஆகாய வழிச்செல்வதைக் கண்டார். தம் குதிரையின் காதில் மந்திரோபதேசம் செய்தார், குதிரையும் ஆகாயவழி பறந்து வெள்ளையானைக்கு முன்சென்றது. சேரமானும் அத்திருக்கூட்டத்துக்கு முன் நம்பியாரூரைச் சேவித்துக்கொண்டே சென்றார். இவர்களைக் கண் எட்டியமட்டில் கண்டுகொண்டு இருந்த சேனவீரர்கள் அப்புறம் காணமுடியாதவர்களாய் தங்களைத்தாமே அரிகையினால் வெட்டி வீழ்த்த, வீரஉடம்புடனே தங்கள் தலைவரை அடைந்தார்கள். தேவர்கள் அழைத்ததும் யானையின்மேல் ஏறிச்செல்வதற்கு ஒருப்படுவதற்கு முன் நம்பியாரூரர் தமது உயிர் நண்பரிடம் சொல்லி விடைபெற்றுப் போகலாகாதோ என்றால் அதுமுடியாத காரியம்.

"விண்ணிடைத் தருமராசன் விரும்பினால் விலக்குவாரா."

இயமதூதர் அழைத்தாலே ஒருகணமும் அதனைத் தாமதிக்க உயிர்களால் முடியாது.

"கோடிபொன்றருவான்; இன்றே கோடிர் ஓர் மாத்திரைக்குள்
ஊடியகினைக்கோர் வார்த்தை உரைத்தடைகுவன் என்றாலும்
தேடியகாலதூதர் சிமிழ்த்தல் விட்டகல்வரே கொல்"

என்பது முழு உண்மையல்லவா.

அப்படியிருக்க எல்லாம் வல்லவரால், இயமன் முதலிய தேவர்க்கும் ஆணை தந்தவராய் உள்ள இறைவன் அழைப்பினை யார்தான் தாமதிக்க முடியும்? ஆயின் நேரே விடை பெறுவதைவிட பதின் மடங்கு விரைவில் நம்பியாரூரர் நினைவு பெருமானை உடனே சென்று தாக்கி உணர்த்தியதன்றோ! யானையும் குதிரையும் ஆகாயவீதியில்

திருக்கயிலைக்கு விரைந்து சென்றன. பெருந் தேவர்களும் உடன் சென்றார்கள். திருக்கயிலையில் தென்றிசைத் திருவாயிலில் இருவரும் தத்தம் வாகனங்களிலிருந்து இறங்கி நம்பியாரூரர் மட்டும் உள்ளே சென்றார். சேரமான் பெருமாள் வாயிலில் தடைபட்டு நின்றனர். ஆரூரர் சுவாமி சந்நிதானத்தையடைந்து தாய்பசுவை விட்டு நெடு நாட் பிரிந்து வருந்திய கன்று தாயை அடைந்தது போல மிகு ஆர் வத்துடன் இறைவனை அடைந்து வணங்கி நின்றார். ஆரூரனே வந்தனையோ? என்று இறைவன் அருளுடன் கேட்க ஆரூரர் அடியே னது பிழையைப் பொறுத்து ஆட்கொண்டு மீளா நெறியாகிய இன் பத்தைத்தந்த தேவரீர் பெருங்கருணை என் தாத்தில் அடங்குவதோ என்று பணிந்து ஆனந்த பரவசமாய் நின்றனர். அதன்பின்பு சேர மான் இறைவனிடம் திருவாயிற்புறத்திலே நிற்கின்றார் என்று விண்ணப்பம் செய்தனர். அவர் பெரிய தேவராகிய திருநந்திதேவ ருக்கு உத்திரவு செய்து அவரை அழைத்து வரச்செய்தனர்.

(தொடரும்.)

நாட்டு நடப்பு.

மத்தியதரக் கல்வி.

நாகரீகத்தில் முதிர்ச்சியடைந்த சில நாடுகளில் மத்தியதரப் படிப்பை கட்டாயப் படிப்பாக வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். ஆனல் நமது நாட்டிலோ ஆரம்பப் படிப்பே கட்டாயமாகாமல் இருக்கும்போது மத்தியதரப் படிப்பைப்பற்றி நினைக்கவேண்டியதேயில்லை.

* * *

கொங்கு நாட்டில் ஆரம்பப் படிப்பைப்போல் மத்தியதரப் படிப்பும் தாழ்ந்தேயிருக்கிறது. கோவை ஜில்லாவில் மத்தியதரப் பாடசாலைகளின் மொத்தம் 24 ஆகும். அவைகளில் 16 உயர்த ரமும் 8 நடுத்தரமும்கொண்ட 18 பொதுப் பாடசாலைகளும், 2 மிஷன் பாடசாலைகளும், 4 உதவிபெறும் மிஷன் அல்லாத பாட சாலைகளும், இருக்கின்றன.

எல்லாப் பாடசாலைகளிலும் படிக்கும் பிள்ளைகளின் மொத்தம் 9018. அவர்களில் 8577 ஆண்பிள்ளைகளும் 441 பெண்பிள்ளைகளும் ஆவார்கள். இந்த ஜில்லாவில் பள்ளிக்குப் போகத்தக்க பிள்ளைகளின் கணக்கு 12,18,224 ஆகும். அவர்களில் 1,000-க்கு 7 பேர்கள் பாடசாலையில் வாசிக்கிறார்கள். அடுத்த ஜில்லாக்களாகிய சேலத்தில் 42 பேரும், நீலகிரியில் 11 பேரும், மலையாளத்தில் 10 பேரும் வாசிக்கிறார்கள்.

* * *

மத்தியதரப் படிப்பைக் கற்றுக்கொடுக்கும் ஆண்பாடசாலை ஆசிரியர்கள் 411 பேர். அவர்களில் 353 பேர் போதனைமுறை பெற்றவர்கள்; 58 பேர் அனையவர்கள்.

* * *

உதவிபெறும் பாடசாலைகளில் படிப்பிற்கு ரூ. 11,299,ம் அனுகரண உதவி ரூ. 2134 ம் தேகப் பரீக்ஷை உதவி ரூ. 64ம், மற்றவை ரூ. 80-ம் உதவியாகத்தரப்படுகின்றது. பிள்ளைகளின் ஆரோக்கிய நிலையைப் பரீக்ஷிப்பதற்காக வைத்தியர்களை வைத்திருக்கிறார்கள்.

* * *

பெரும்பான்மையான பாடசாலைகளில் மேல் வகுப்புகளில் பாடங்களை ஆங்கிலத்திலே கற்றுக்கொடுக்கிறார்கள். இலண்டன் மிஷன் பாடசாலையில் பூகோளமும் சரித்திரமும் தமிழில் சொல்லப் பட்டுவருகிறது. மற்றப் பாடசாலைகளில் எப்பொழுது தமிழில் கற்பிக்கமுயலுவார்களோ தெரியவில்லை.

(28-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஸ்ரீ சுந்தரமூர்த்திகள் "கொங்கில் குறும்பில் குரக்குத்தளியாய்" என்று தமது ஊர் தொகைப் பதிகத்தில் பாடியிருக்கின்றனர். அக் காலத்தில் பழஞ்சலாகை அச்சு என்ற ஒரு பொன்நாணயம் வழங்கி வந்ததாகத் தெரிகிறது. அந்நாணயத்திலிருந்துவரும் வட்டியிலிருந்து சந்தியாதீபம் ஒன்றை சதாகாலம் எரிக்கமுடியும் என்று தெரிகிறதினால் அந்நாணயம் மிகவும் விலை உயர்ந்ததாக இருந்திருத்தல் வேண்டும்.

இந்த இரண்டு கல்வெட்டுகளினால் மருதமலையின் பெருமை 800 ஆண்டுகளுக்கு முன்னரே அறியப்பட்டு மக்களிடையில் வழங்கி இருந்தது என்று சரித பூர்வமாக அறிகின்றோம்.

கோவைக் கிழார்.

திங்கட் செய்திகள்.

கோவைத் தமிழ்ச் சங்கத்தில் 14—4—34-ல் "அன்பின் மாட்சியும் இன்பக் காட்சியும்" என்ற பொருள் பற்றிக்கல்லல் உயர்திரு. மாணிக்கவாசக சரணாலய சுவாமிகள் அவர்கள் இரண்டாவது சொற்பொழிவு நிகழ்த்தினர்கள்.

* * *

சைவப் பிரசங்க சாலையில் இம்மாதத்தில் வெள்ளிகளில் பெரிய புராணம் திருஞானசம்பந்த நாயனார் புராணப் பகுதிகளும் இரண்டு திங்கட்கிழமைகளில் 'திருவிளையாடற்புராணம் தருமிக்குப் பொற்கிழியளித்த படலம்' கரனைக் கரையேற்றிய படலம் இவைகளும் பிரசங்கிக்கப்பெற்றன.

* * *

கோவை ஜில்லாக்கல்விச் சங்கத்தின் வாயிலாக Y. M. C. A. சங்கக் கட்டடத்தில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்குத் தேகாப்பியாசப் படிப்பு வகுப்பு ஒன்று 23—4—34 தேதி முதல் நடைபெற்று வருகிறது. அதில் தேகாப்பியாசப் பாடங்கள், தேகதத்துவம், தேக ஆரோக்கிய விதிகள், தேகாப்பியாசச் சரித்திரம் முதலியவைகள் பாடங்களாகப் புகட்டியும், அப்பியாசங்களும் விளையாட்டுகளும் நேரில் கற்றுக்கொடுத்தும், நடத்தப்பெறுகின்றது.

* * *

இவ்வகுப்பிற்கு ஆசாரியர்கள் திரு. சாண்டியாகோ, இராஜரத்தினம், ஆவர். தேகாப்பியாசச் சரித்திரத்தை 26-4-34, 27-4-34 நாள்களில் திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் எடுத்துரைத்தார்கள்.

* * *

கோவைச் சாரணச்சங்கத்தின் ஆதரவின்கீழ் துடியலூருக்கு அருகில் சாரணப் பயிற்சி ஒன்று நடைபெறுகிறது. அதற்கு V. S. இரத்தினசபாபதி அவர்கள் ஆசிரியராக இருந்து நடத்துகிறார்கள். 27—4—34-ல் சாரணத் தலைவர் திரு. V. C. சுப்பைய கவுண்டர் பொதுஜனங்களை அழைத்து உபசரித்தார்கள்.

* * *

கோவை உபாத்திமைத் சங்கத்தார் 28—4—34; 29—4—34 என்ற இரு தினங்களில் திருப்பூரில் ஆண்டுவிழாவும் மகாநாடும் நடத்தினர்கள். அதுபொழுது கனம். V. S. ஸ்ரீனிவாச சாஸ்திரி அவர்கள் மகாநாட்டைத் திறந்துவைத்தார்கள். திருச்சி தலைமைப் போதனாசிரியர் திரு. சாரனதன் அவர்கள் தலைமை வகித்தார்கள். பல அருமையான உபந்நியாசங்கள் நடைபெற்றன.

பிழை திருத்தம்.

இந்த இதழில் பக்கங்களின் எண்களில் 1 முதல் 31 என்பவைகளை 33 முதல் 63 என்று திருத்திக்கொள்ளவும்.

கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடுகள்.

1. ஸ்ரீ சுந்தர மூர்த்திகளும் கொங்கு நாடும்.
திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார்
அவர்கள் B. A., B. L., இயற்றியது. விலை ரூ. 0-10-0

2. கடவுள் வணக்கச் செய்யுட்கள். (3-ம் பதிப்பு)
(சிறுவர் சிறுமியர்க்காகத் திரட்டியது)
விலை ரூ. 0-3-0

3. ஸ்ரீ மாணிக்கவாசகர் அல்லது உத்தர் பெருமை.
(படங்களுடன்)
திரு. C. K. சுப்பிரமணிய முதலியார்
அவர்கள் B. A. இயற்றியது. விலை ரூ. 1—4—0

4. அவிநாசிப் பெருங்கருணையம்மை பிள்ளைத்தமிழ்.
திரு. C. K. சுப்பிரமணிய முதலியார்
அவர்கள், B. A. இயற்றியது. விலை அணா. 0—8—0

5. சஹிகாந்தன். (புதுக்கதை)
திரு. V. N. மருகாசலக் கவுண்டர்
இயற்றியது. விலை ரூ. 1—0—0

6. கருவூர்த் தேவர்.
திரு. C. K. சுப்பிரமணிய முதலியார்
அவர்கள். B. A. இயற்றியது. விலை ரூ. 0—8—0

7. மருகமலை மான்மியம். (படங்களுடன்)
திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார்
அவர்கள் B. A., B. L., இயற்றியது. விலை ரூ. 0—6—0

8. இளைஞர் பாடல்.
திரு. C. M. இராமச்சந்திர
அவர்கள். B. A., B. L., இயற்றியது.

9. சேக்கிழார். (படங்களுடன்)
திரு. C. K. சுப்பிரமணிய முதலியார்
அவர்கள். B. A. இயற்றியது. விலை ரூ. 1—8—0

Edited & Published by Rao Sahib C. M. Ramachandran Chettiar, Coimbatore
& Printed by Mrs. Balasundara Shanmughasundaram
at The Royal Press, Raja Street, Coimbatore.